தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியம் குருகாட்டூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் II 20252026 கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தினை மாண்புமிகு மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் நேற்று (03.12.2025) திறந்து வைத்தார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.இரா.ஐஸ்வர்யா உள்ளார்.

தூத்துக்குடி – ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம்

அங்கமங்கலம் - குருகாட்டூரில் துணை சுகாதார நிலையம்!

அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்!

தூத்துக்குடி, டிச.4-

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம் அங்கமங்கலம் ஊராட்சி மற்றும் குருகாட்டூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகம் ஆகியவற்றை மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் திறந்து வைத்தார்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து திருச்செந்தூர் - காயாமொழி தாண்டவன்காடு வழியாகவும், திருச்செந்தூர் - நாசரேத் காயாமொழி, மூலக்கரை வழியாகவும், சாத்தான்குளம் - முதலூர், திருவைகுண்டம் - மணக்கரை ஆழ்வார்கற்குளம் வழியாகவும், திருவைகுண்டம் - வல்லநாடு, திருச்செந்தூர் - ஏரல் சிவத்தையாபுரம் வழியாக என மொத்தம் 5 புதிய மகளிர் விடியல் பயண பேருந்துகளை மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் கொடியசைத்து தொடங்கி வைத்து, ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம் அங்கமங்கலம் ஊராட்சியில் 15வது நிதிக்குழு மானியத்திட்டம் 2024-2025 கீழ் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு துணை சுகாதார நிலையத்தினையும், ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம் குருகாட்டூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் - II 2025-2026 கீழ் ரூ.31.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலகத்தினையும் மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்து குத்து விளக்கேற்றினார்.

மேலும், அங்கமங்கலம் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு துணை சுகாதார நிலையத்தில் மக்களை தேடி மருத்துவம் பயனாளிகளுக்கு மருந்து பெட்டகங்களை மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி. இரா.ஐஸ்வர்யா, திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் ரா.கௌதம், திருச்செந்தூர் நகர்மன்ற தலைவர் திருமதி சிவஆனந்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒலிம்பிக்கில் இந்திய விளையாட்டு வீரர்கள் மிகச்சிறப்பாக செயல்பட

ஒன்றிய அரசிடம் ஏதேனும் புதிய திட்டங்கள் உள்ளதா?

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கேள்வி?

புதுடெல்லி, டிச.4-

தென்சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் விளையாட்டு துறை சம்பந்தமான சில கேள்விகளை கேட்டார்.

அதன் விபரம், 2028ம் ஆண்டு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் 2032 ம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் நடைபெறும் அடுத்த 2 ஒலிம்பிக் அட்டவணையில் இந்திய விளையாட்டு வீரர்கள் மிகச்சிறப்பாக செயல்பட ஒன்றிய அரசிடம் ஏதேனும் புதிய திட்டங்கள் மற்றும் பயிற்சி அட்டவணைகள் உள்ளதா?

2036ம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக்கை நடத்த இந்தியா ஆர்வமாக உள்ளதா?

இது தொடர்பாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? போன்ற கேள்விகளை கேட்டு இருந்தார்.

இதற்கு ஒன்றிய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மன்சுக் மண்டாவியா எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார்.

அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

2028 அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் 2032 ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் உள்ளிட்ட அனைத்து வரவிருக்கும் சர்வதேச போட்டிகளுக்கும் உயரடுக்கு விளையாட்டு வீரர்களை ஆதரிப்பதற்காக, இந்திய அரசு தேசிய விளையாட்டு கூட்டமைப்பு களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் பின்வரும் 2 முக்கியமான திட்டங்களை செயல்படுத்துகிறது.

தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கு உதவி செய்வது. அதாவது உயரடுக்கு விளையாட்டு வீரர்களின் பயிற்சி, வெளிப்பாடு போட்டிகள், வெளிநாட்டு பயிற்சியாளர்கள் மற்றும் ஆதரவு ஊழியர்களை ஈடுபடுத்துதல், உபகரணங்கள் மற்றும் பிற உயர் செயல்திறன் தொடர்பான செயல்பாடுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கப்படுவது போன்றவை.

இலக்கு ஒலிம்பிக் மேடைத் திட்டத்தின் கீழ், ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக்கிற்கான நிரூபிக்கப்பட்ட பதக்க திறன் கொண்ட அடையாளம் காணப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட ஆதரவு வழங்கப்படுகிறது.

இதில் வெளிநாடு மற்றும் இந்திய பயிற்சி, சர்வதேச போட்டிகள், விளையாட்டு அறிவியல் ஆதரவு, உபகரணங்கள், பணம் மற்றும் ஆதரவு ஆகியவை அடங்கும்.

இந்தியாவில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான ஏலம் விடுதல் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் பொறுப்பாகும். மேலும் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான உரிமைகளை சர்வதேச ஒலிம்பிக் குழு விரிவான ஹோஸ்ட் தேர்வு செயல்முறை மூலம் செய்கிறது.

ஹோஸ்ட் தேர்வு செயல்முறை பொது களத்தில் ஐ.ஓ.சி வலைத்தளத்தில் கிடைக்கிறது.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு துறை மட்டுமின்றி தனியார் துறை நிறுவனங்களிலும்

காலிப் பணியிடங்கள் நிரப்பிட வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன!

செய்தித்தாள்களில் வந்த செய்திக்கு தொழிலாளர் நலத்துறை விளக்க அறிக்கை!

சென்னை, டிச.4-

27.10.2025 அன்று செய்தித் தாள்களில் வெளிவந்த "வேலையே தராத வேலைவாய்ப்பு துறை" என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டதற்கான தொழிலாளர் நலத்துறையின் விளக்க அறிக்கை வருமாறு:-

(i) அரசாணை (நிலை) எண்.790, தொழிலாளர் நலத் துறை, நாள் 05.07.1971 ன் படியும் மற்றும் அரசாணை (நிலை) எண்.1138, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25.09.1978ன் படியும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்கு உட்படாத அனைத்து தற்காலிக மற்றும் நிரந்தர பணி நியமனங்களும், அரசிடமிருந்து நிதி உதவி பெறும் தொழில் நிறுவனம், பல்கலைக்கழகங்கள், பள்ளிகள், விடுதிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் பணி நியமனங்களும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாக மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. வேலைவாய்ப்பு அலுவலக உயிர் பதிவேட்டில் தகுதியான பதிவுதாரர்கள் இல்லாத பட்சத்தில் ஆளில்லா சான்றிதழ்கள் பெறப்பட்ட பின்னரே பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டது.

(ii) இந்நிலையில், உச்சநீதிமன்ற வழக்கு எண்.11646 11724/1996ல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், ஒன்றிய அரசின் அனைத்து துறைகளும், பொதுத் துறை பணிக்காலியிடங்களை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களுக்கு அறிவிப்பு செய்வதோடு மட்டுமின்றி, பத்திரிக்கைகளிலும் விளம்பரப்படுத்த வேண்டும் என ஒன்றிய அரசால் (ஆணை எண். 14024/2/96 நிர்வாகம் (டி), நாள் 18.05.1998ல்) அறிவுறுத்தப்பட்டது.

(iii) இதனையடுத்து, அனைத்து மாநில அரசுகளும் மேற்படி தீர்ப்பின் அறிவுரைகளை, அனைத்து மாநில அரசுகளும் தவறாது பின்பற்றவேண்டும் என ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் இதே பொருண்மையில் திரு.கே.பி.ஜெகன்நாதன் என்பவர் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் தொடர்ந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11.03.2015 அன்று வெளியிடப்பட்டு, உச்சநீதிமன்ற ஆணைகளை பின்பற்றுமாறு அரசால் ஆணையிடப்பட்டது. மேற்கண்ட தீர்ப்புகள் மற்றும் அரசாணையின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டது.

(iv) இவ்வாணையின் அடிப்படையில், பொதுத் துறை பணிக்காலியிடங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் மூலம் பரிந்துரைக்கப்படும் பட்டியல்கள் மற்றும் விளம்பரம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நேர்காணல் நடத்தப்பட்டு மனுதாரர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

(v) வேலைவாய்ப்பு துறையின் முக்கிய பணியான பரிந்துரை பணியில் மேற்கண்ட மாற்றம் ஏற்பட்டதால், இத்துறையானது, அரசாணை (நிலை) எண்.132, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (என்.1) துறை, நாள். 30.07.2019-ன்படி மறுசீரமைப்பு செய்யப்பட்டு, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் என்பது மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் என பெயர் மாற்றம் பெற்று பரிந்துரைப் பணி அல்லாது மாணவர்களுக்கு தொழில் நெறி வழிகாட்டும் பணிகளையும் சிறப்புடன் செய்து வருகிறது.

(vi) அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலுள்ள தன்னார்வ பயிலும் வட்டங்கள் மூலமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் போன்ற பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்கான புத்தகங்கள், தினசரிகள் மற்றும் முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் ஆகியவை தன்னார்வ பயிலும் வட்ட நூலகத்தில் பராமரிக்கப்பட்டு அதிகப்படியான மாணவர்களால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், இலவச பயிற்சி வகுப்புகள் நேரடியாகவும், இணைய வழியாகவும், நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசால் ஆண்டொன்டிற்கு ’ரூ.4.22 கோடி செலவிடப்படுகிறது. இத்தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக 07.05.2021 முதல் 30.09.2025 வரை 6,891 மாணவர்கள் பல்வேறு போட்டித்தேர்வுகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

(vii) இப்பணிகளுடன் தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள், கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள், உயர்கல்வி தொடர்பான தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள், பல்வேறு அரசு சார்ந்த உதவித்தொகைகள் பற்றிய விவரங்கள் மற்றும் வேலைவாய்ப்பு பெறுவதில் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கான திறன் மேம்பாடு குறித்த வழிகாட்டுதல் போன்றவை மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு பள்ளி, கல்லூரிகளில் வழங்கப்பட்டு வருகிறது.

போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள்!

(viii) மேலும், இணைய வழி கற்றல் முறையில் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் வகையில் மெய்நிகர் கற்றல் இணையதளம் https://tamilnaducareerservices.tn.gov.in செயல்பட்டு வருகிறது. இதில் போட்டித்தேர்வுகளுக்கான காணொளி காட்சிப்பதிவுகள், ஒலிப்பதிவுகள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. பதிவு தாரர்கள் இப்பாடக்குறிப்புகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதுவரை இவ்விணையதளத்தில் 5,25,910 தேர்வர்கள் பதிவு செய்துள்ளனர். 1,140 மென்பாடக்குறிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அதுபோன்று, கல்வித்தொலைக்காட்சி வாயிலாகவும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் 20.03.2022 முதல் ஒளிபரப்பப்பட்டு வருகிறது. 1870 மணிநேர இலவச பயிற்சி வகுப்புகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன. இந்த வீடியோக்கள் இத்துறையின் TN Career Services YouTube சேனலிலும் பதிவேற்றப்பட்டுள்ளன.

(ix) தற்போது அரசுத் துறையில் மட்டுமன்றி, தனியார் துறை நிறுவனங்களில் உள்ள பணி காலியிடங்களிலும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை பணிய மர்த்தம் செய்ய உதவிடும் வகையில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களானது மாதந்தோறும் ஒரு வேலைவாய்ப்பு முகாமும், ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒரு பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாமும் நடத்துகின்றன. தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துவதற்கென அரசு ஆண்டுதோறும்

ரூ.3.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்கிறது. 07.05.2021 முதல் 27.10.2025 வரை, 349 மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் 1,990 சிறிய வேலைவாய்ப்பு முகாம்கள் என மொத்தம் 2,338 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனால் 4,798 மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்கள் உட்பட 2,78,619 வேலைநாடுநர்கள் பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

(x) வேலையளிப்பவர் மற்றும் வேலைநாடுநர்களை இணையவழியாக இணைக்கும் வண்ணம், தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையமானது (www.tnprivatejobs.tn.gov.in) 16.06.2020 அன்று தொடங்கப்பட்டது. இவ்விணையதளத்தில் 4,76,743 வேலைநாடுநர்களும், 10,935 வேலையளிப்பவர்களும் பதிவு செய்துள்ளனர். 42,637 நபர்கள் பணிநியமனம் பெற்றுள்ளனர்.

(xi) மேலும், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து உயிர் பதிவேட்டில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் காத்திருக்கும் பொது வேலைநாடுநர்களுக்கும் மற்றும் ஓராண்டிற்கு

மேல் காத்திருக்கும் மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களுக்கும் வேலைவாய்ப்பற் றோருக்கான உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 12,125 பொதுப் பயனாளிகளும் 2,237 மாற்றுத்திறனாளி பயனாளிகளும் பயன்பெற்று வருகின்றனர்.

(xii) மேலும், அரசாணை (நிலை) எண்.24, சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை, நாள் 03.07.2025ன்படி, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கி வேலைவாய்ப்புகள் பெறும் நோக்கில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திறன் மையங்கள் (திறனகம்) உருவாக்கப்படவுள்ளது. அதில், இத்துறையின் ஒரு இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திறன் அலுவலராக செயல்படுவார். இவ்வாறு, வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெற்றிட, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் இணைப்பு பாலங்களாக செயல்பட்டு வருகிறது என்று தொழிலாளர் நலத் துறை தெரிவித்துள்ளது.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் வானவில் விஜய் அறிக்கை!

சென்னை,டிச.4-

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அமைப்பாளர் வானவில் விஜய் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று 04.12.2025 வியாழக்கிழமை பகல் 12 மணி அளவில் சென்னை ஓட்டேரி எண்.7 செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறும் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு ஆலோசனை வழங்குகிறார்.

இந்த கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி பகுதி அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய் தெரிவித்துள்ளார்.

சிவசங்கர் அறக்கட்டளை சார்பில் – ஆண்டிமடம் ஒன்றியம் அரசு மேல்நிலைப்பள்ளியில்

"தேர்வை வெல்வோம்" வழிகாட்டி வினாவிடை தொகுப்பு கையேடு!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார்!

அரியலூர்,டிச.4

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியத்தில் "சிவசங்கர் அறக்கட்டளை சார்பில்" ஆண்டிமடம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும், 10,11,12 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு, பொதுத்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ள உதவும் "தேர்வை வெல்வோம்" வழிகாட்டி வினாவிடை தொகுப்பினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழங்கினார்.

தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர்கொண்டு, வெற்றி பெற அன்பார்ந்த மாணவச் செல்வங்களை வாழ்த்தி மேலும், அப்பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் குடிநீர் பாட்டில்களையும் வழங்கி மாணவ,மாணவியர்களிடம் உரையாற்றினார்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

கடந்த ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரியலூர் மாவட்டம் முதலிடம் பிடித்து வெற்றி பெற்றது

தற்பொழுது இது மிகப் பெரிய வரலாற்று நிகழ்வாக உள்ளது அரியலூர் மாவட்டம் மாநிலத்தில் முதன்மையாக வந்துள்ளது கடந்த காலங்களில் பின்தங்கி இருந்த இந்த அரியலூர் மாவட்டம் கல்வியில் முன்னேறி இருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும் கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்வில் மாநிலத்தின் முதலிடம் என்பதும் பிளஸ் 2 வில் முதலிடம் என்பது இந்த மாவட்டங்களின் வளர்ச்சியை காட்டுகிறது முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி வழிகாட்டுதல் படி இந்த துறை மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளின் ஆசிரியர்கள் முழு உழைப்பையும் வழங்கி வெற்றி வாய்ப்பை இந்த மாவட்டங்களில் கொடுத்துள்ளார்கள் மாணவ மாணவிகளும் மிகச் சிறப்பான முயற்சி செய்து படித்து கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் மாணவ, மாணவியர்கள் நன்றாக படித்து வெற்றி வாகை சூடவேண்டும்

நமது மாவட்டத்தின் கல்வித்துறை சார்ந்த அத்தனை அதிகாரிகள் ஆசிரியர்களுக்கும் மாணவ செல்வங்களுக்கும் அரியலூர் மாவட்ட மக்களின் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடந்த 2006-2011 ஆண்டில் ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது "தேர்வை வெல்வோம்" என்ற புத்தகம், கையேடு வழங்கி சிறந்த ஆசிரியர்களை கொண்டு வழிகாட்டி பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கு கொடுத்தேன் தொடர்ந்து கல்விக்கு பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளோடு செயல்பட்டு வருகிறேன் அதன் பெயரிலேயே 10,11,மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் என்னால் முடிந்த அளவில் முக்கிய வினா விடைகள் அடங்கிய புத்தகத் தொகுப்பை வழங்கி சிறிய அளவிலான எனது பங்களிப்பை அளித்து வருகிறேன் அதே போல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் நேரடியாக சென்று மாணவ மாணவிகளை சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்து உற்சாகப்படுத்தி வருகிறேன் நான் வழங்கிய கையேடு உங்களுக்கு உதவியாக இருந்திருக்கும் எனினும் ஆசிரியர்கள் பங்களிப்பு இதில் முக்கியமானது, மாணவ, மாணவியர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் தாய், தந்தை, ஆசிரியர்களின் தியாகத்தை நினைத்து நன்றாக படித்து தேர்வில் வெற்றிபெற வேண்டும், முதலமைச்சர், துணை முதல்வர் சார்பிலும், எனது சார்பிலும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என கூறினார்.

கொரடாச்சேரியில் அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசசின் மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் மாணவமாணவிகளுக்கு மிதிவண்டிகளை பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார்.மாவட்டஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள்,பேரூர் செயலாளர் பூண்டி.கே. கலைவேந்தன் மற்றும் கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் , பெற்றோர்கள் உடன் பங்கேற்றனர்.

டிட்வா புயல் மழையின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலம், வார்டு23க்குட்பட்ட தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு உணவு வழங்கும் வகையில் மாதவரம் மண்டல அலுவலகத்தில் உள்ள மைய சமையல் கூடத்தில் உணவு தயாரிக்கப்படுவதை மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் நேற்று (03.12.2025) பார்வையிட்டார்.